பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி
சென்னை – 4

12-08-2025 TUESDAY 7.15 PM

## ஆகாஷவாணி
## தலைப்புச் செய்திகள்

- அரிவாள்செல் ரத்தசோகை நோயை முற்றிலும் ஒழிக்க அரசு உறுதிபூண்டு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- அருணாச்சலப்பிரதேசத்தில் 8 ஆயிரத்து 146 கோடி ரூபாய் செலவில் 700 மெகாவாட் நீர்மின் உற்பத்தித் திட்டத்தை செயல்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- நாட்டில் துறைமுகங்களின் சரக்கு கையாளும் திறன் 855 மில்லியன் டன்னாக அதிகரித்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் கூறியுள்ளார்.
- அரசு நிர்வாகத்தில் மக்களின் நலனை முன்நிறுத்தும் திட்டமாக Svamitva திட்டம் அமைந்துள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.
- உத்தராகண்ட், இமாச்சலப்பிரதேசம் ஆகிய மாநிலங்களின் பல்வேறு இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு அதிகனமழைக்கான சிவப்பு நிற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## - இனி விரிவான செய்திகள் -

<<<<<<<>>>>>>>

அரிவாள்செல் ரத்தசோகை நோயை முற்றிலும் ஒழிக்க அரசு உறுதிபூண்டு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா எழுதிய கட்டுரையை அவர் சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார்.

2047-ஆம் ஆண்டுக்குள் இந்நோயை ஒழிக்க இலக்கு நிர்ணயித்து அரசு செயல்படுவதாக அவர் கூறியுள்ளார்.

இந்த நோயை ஒழிப்பதற்கான தேசிய இயக்கம் தொடங்கப்பட்டுள்ளதாகவும், இது மரபணு கோளாறுகளை எதிர்த்து போராடும் புதிய சகாப்தமாக அமையும் என்றும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>>

அருணாச்சலப்பிரதேசத்தில் 8 ஆயிரத்து 146 கோடி ரூபாய் செலவில் நீர்மின் உற்பத்தித் திட்டத்தை செயல்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதுகுறித்து புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், அருணாச்சலப்பிரதேசத்தின் *Tato* இரண்டாம் கட்ட நீர்மின் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இது 700 மெகாவாட் திறன் கொண்டது என அவர் தெரிவித்தார்.

*Shiyomi* மாவட்டத்தில் அடுத்த ஆறு ஆண்டுகளுக்குள் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்று அவர் கூறினார்.

வடகிழக்குப பகுதியில் மின் தேவைகளை பூர்த்தி செய்யவும், அப்பகுதியின் வளர்ச்சிக்கும் இத்திட்டம் பெரிதும் உதவிகரமாக அமையும் என்று அவர் தெரிவித்தார்.

லக்னோ மெட்ரோ ரயில் திட்டத்தின் அடுத்தக்கட்ட பணிகளுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

*Charbagh – Vasant Kunj* இடையே ஐந்தாயிரத்து 801 கோடி ரூபாய் மதிப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

இந்த வழித்தடத்தில் அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் 12 நிலையங்களுடன் மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்படும் என்று திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

சுரங்க ஒதுக்கீட்டில் வெளிப்படைத் தன்மை கடைபிடிக்கப்படுவதாக மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

மக்களவையில், சுரங்க மற்றும் கனிமங்கள் மேம்பாட்டு மற்றும் ஒழுங்குமுறை மசோதா இன்று நிறைவேற்றப்பட்டது.

இதன்மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய அமைச்சர், இந்த மசோதா குத்தகை நடைமுறைகளை எளிதாக்குவதாக தெரிவித்தார்.

லித்தியம், கிராஃபைட், நிக்கல் உள்ளிட்ட கனிமங்களுக்கு இது பொருந்தும் என அவர் கூறினார்.

மரபுசாரா எரிசக்தி துறையிலும், மின்சார வாகன போக்குவரத்திலும் கனிமங்கள் முக்கிய பங்காற்றுவதாக அவர் தெரிவித்தார்.

முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் ஏல நடைமுறைகளில் வெளிப்படைத்தன்மை இல்லை எனவும், அது ஊழலுக்கு வழிவகுத்ததாகவும் திரு கிஷன் ரெட்டி குற்றம் சாட்டினார்.

<<<<<<<>>>>>>>

நாட்டில் துறைமுகங்களின் சரக்கு கையாளும் திறன் 855 மில்லியன் டன்னாக அதிகரித்துள்ளது என்று மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

மக்களவையில் இன்று துறைமுகங்கள் மசோதா நிறைவேற்றப்பட்டது.

இதன்மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய அமைச்சர், இந்த மசோதா துறைமுகங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை ஊக்குவிப்பதுடன், வர்த்தகம் செய்வதை எளிதாக்கும் என்றார்.

மேலும், துறைமுக கடற்கரைப்பகுதிகளை உகந்த முறையில் பயன்படுத்துவதை இது உறுதி செய்யும் என்று அவர் கூறினார்.

சிறிய துறைமுகங்களை திறம்பட நிர்வகிக்க மாநில அளவில் கடல்சார் வாரியங்களை நிறுவவும் இது வகை செய்வதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் கடந்த பத்தாண்டுகளில் துறைமுகங்களின் சரக்கு கையாளும் திறன் 87 சதவீதம் அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

கடல்சார் கப்பல் போக்குவரத்து கடந்த 11 ஆண்டுகளில் 180 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் திரு சர்பானந்த சோனோவால் குறிப்பிட்டார்.

<<<<<<<>>>>>>

தேசிய விளையாட்டு சங்கங்களின் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய மத்திய அரசு முன்னுரிமை அளித்து வருவதாக விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

மாநிலங்களவையில், தேசிய விளையாட்டு நிர்வாக மசோதா மற்றும் ஊக்க மருந்து தடுப்பு திருத்த மசோதா மீதான விவாதத்திற்கு இடையே பேசிய அவர், அரசு, விளையாட்டு வீரர்கள் மற்றும் விளையாட்டு கூட்டமைப்புகள் ஆகிய மூன்று தரப்பினரும், விளையாட்டு மேம்பாட்டில் முக்கிய பங்காற்றுவதாக தெரிவித்தார்.

தேசிய விளையாட்டு கூட்டமைப்புகளில் நிர்வாகிகள் தேர்வு, வீரர்கள் தேர்வு ஆகியவற்றில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்தவும், மகளிரின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கவும், தேசிய விளையாட்டு மசோதா வகை செய்யும் என்று அவர் கூறினார்.

ஊக்க மருந்துகளின் பயன்பாட்டை தடுக்கவும், இதுதொடர்பான தேசிய அமைப்பிற்கு கூடுதல் அதிகாரம் அளிக்கவும், ஊக்கமருந்து தடுப்பு திருத்த மசோதா வகை செய்யும் என்று திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

மக்களை மையமாக கொண்ட நிர்வாகத்திற்கு உலகளாவிய முன்மாதிரியாக *Svamitva* திட்டம் அமைந்துள்ளது என்று மத்திய

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இத்திட்டம் தொடர்பாக இன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் பேசிய அவர், கிராமப்புறங்களில் நில அளவீடுகளுக்காக தற்போது தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவதாக கூறினார்.

*Svamitva, Amrut, Naksha* உள்ளிட்ட திட்டங்களில் தொழில்நுட்பம் முக்கிய பங்காற்றுவதாக அவர் தெரிவித்தார்.

நில அளவையில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவது தொடர்பாக, ஆறு நாடுகளுடன் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திரு ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<<<<>>>>>>>

இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கம் நாடுமுழுவதும் நடைபெற்று வருகிறது.

இதனையொட்டி, பல்வேறு இடங்களில் தேசியக்கொடி பேரணிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

அருணாச்சலப்பிரதேச மாநிலம் இட்டா நகரில் நடைபெற்ற தேசியக்கொடி பேரணியை, மாநில ஆளுநர் திரு *K T Parnaik* மற்றும் முதலமைச்சர் திரு *Pemma Khandu* தொடங்கிவைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய முதலமைச்சர் திரு *Pemma Khandu* பன்முகத்தன்மை கொண்ட நமது நாட்டில், தேசியக்கொடி பேரணி ஒற்றுமையை ஏற்படுத்தி மக்களை ஒன்றிணைப்பதாக தெரிவித்தார்.

சண்டிகர் விமானப்படைத் தளத்தில் விமானப்படையின் சார்பில் இருசக்கர வாகன பேரணி நடைபெற்றது.

இதில் விமானப்படையின் மூத்த அதிகாரிகளும் பங்கேற்றனர்.

தமிழகத்தின் மத்திய சென்னை பகுதிக்கு உட்பட்ட இடங்களில் நடைபெற்ற தேசிய கொடி ஏற்றும் இயக்கத்தில் பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் பங்கேற்றார்.

திருச்சியில் அஞ்சல் துறை சார்பில் நடைபெற்ற மூவர்ண கொடி சைக்கிள் பேரணியை மத்திய மண்டல அஞ்சல் துறை தலைவர் திருமதி நிர்மலா தேவி தொடங்கிவைத்தார்.

ராமேஸ்வரத்தில் நடைபெற்ற தேசியக்கொடி பேரணியில் கேந்தி

ரிய வித்யாலயா பள்ளியை சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பங்கேற்றனர்.

சென்னை மண்டல பாஸ்போர்ட் அலுவலகத்தின் சார்பில் நடைபெற்ற மனித சங்கிலி நிகழ்ச்சியில், பாஸ்போர்ட் அலுவலக அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் பங்கேற்றனர்.

இந்த இயக்கத்தின் ஒரு பகுதியாக பல்வேறு போட்டிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சென்னை மண்டல பாஸ்போர்ட் அதிகாரி திரு விஜயகுமார் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(Sound Byte –விஜயகுமார் - 42 Sec.)*

<<<<<<<>>>>>>>

உத்தராகண்ட், இமாச்சலப்பிரதேசம் ஆகிய மாநிலங்களின் பல்வேறு இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு அதிகனமழைக்கான சிவப்பு நிற எச்சரிக்கையை வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ளது.

ஜம்மு காஷ்மீரின் சில இடங்களிலும் அதி கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

சில இடங்களில் கடும் வெள்ளப்பெருக்கும், நிலச்சரிவும் ஏற்படக்கூடும் என்பதால், மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தெலங்கானா, ஆந்திரா, ஒடிஷா, சட்டீஸ்கர் ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் மூத்த விஞ்ஞானி திரு ஆர் கே ஜெனமணி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இதனிடையே, ஜம்மு காஷ்மீரின், ஜம்மு, ரஜோரி, ரியாசி, பூஞ்ச் ஆகிய மாவட்டங்களின் பல இடங்களில் இன்று கனமழை பெய்துள்ளது.

இதனால் பல்வேறு இடங்களில் சாலை போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>>

ஐ சி சி-யின் ஜூலை மாதத்திற்கான சிறந்த வீரராக இந்தியாவின் *Shubman Gill* அறிவிக்கப்பட்டுள்ளார்.

<<<<<<<END>>>>>>